

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உ-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆநந்தபரவச தேசிகர்
குருமூர்த்த ஆலயம்

வெளியீடு எண் 110.

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

மிருகேந்திரம்

தமிழ் மொழிபெயர்ப்பு

ஆசிரியர்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்

இது

இவ்வாதீன

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்கள்

ஆணையின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

பிரதிகள் 500.

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

குருபாதம்

பதிப்புரை

அண்ண லருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ண லறைந்த வறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மே லெழுத்தே.

மக்கள் அடையத்தக்க பேறுகள் நான்குள. அவற்றுள் பேரின்பந்தரும் வீடே சிறந்தது. முன்னெண்ணப்படுவனவாகிய அறம், பொருள் இன்பம் என்ற மூன்றும், இன்பமாகவும் இன்பவாயிலாகவும் இருப்பினும் நிலைத்தன அன்மையின் இறுதிக் கண்ணதாகிய வீடே சிறந்தது என்று வேதாகமங்கள் விளம்புகின்றன. வீட்டினியல்பை வேறுவேறு மதங்கள் எடுத்துவிளக்கிச் செல்லுமாயினும், அவை எல்லாவற்றுள்ளும் சிவதாதான்மியங்கூறும் சித்தாந்தமுத்தியே சிறந்தது. இது காண்டல் கருதல் உரை என்ற மூவகைப் பிரமாணங்களாலும் துணியப்பெற்று முடிந்த முடிபாகவுள்ளது. இம்மூன்றனுள் உரையெனப் படுவது ஆப்தவாக்கியம். ஆப்தனே பரம கருணாநிதியாகிய சிவபெருமான். ஆதலால் சிவ பெருமானுடைய வாக்கியம் ஆப்தவாக்கியம். அதுவே ஆகமம், **"आप्तोक्तिरागमः"** என்றும், **'आप्तः परमशिवः नान्यः'** என்றும் பௌஷ்கரவிருத்தி

கூறும். இதனருமையினைப் பாராட்டிய திருமூல தேவநாயனாரும், "அண்ணல் அருளால் அருளும் திவ்யாகமம், விண்ணி லமரர் தமக்கும் விளங்காது" என்று கூறியருளினார்கள்.

அத்தகைய ஆப்த வாக்கியங்களாகிற ஆகமங்கள் இருபத்தெட்டு. அவற்றுள் காமிகமுதல் சுப்ரபேதம்வரை எண்ணப்படுகிற பத்து ஆகமங்களும் **சைவாகமங்கள்** என்று கூறப்பெறுவன. விஜயமுதல் வாதுளம்வரை எண்ணப்படும் பதினெட்டும் **இரௌத்திராகமங்கள்** என்று கூறப்பெறும். இவற்றுள் காமிகம் தலையாயது. விரும்பிய எல்லாப் பொருளையும் விளக்கும் தன்மையதாதலின் காமிகம்எனப் பெயர்பெற்றது. இதனை வடமொழி மிருகேந்திரத்து வரும் **कामदत्वात्कामिकेति प्रगीतं बहु विस्तरम्** என்றபகுதி வலியுறுக்கும். இந்தக்காமிகாகமத்திற்கு மூன்று உபாகமங்கள் உள. அவற்றுள் முதலாவது **மிருகேந்திரம்.** இதற்கு **நாரசிம்மம்** என்ற வேறொரு பெயரும் உண்டு.

இந்த ஆகமம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்குபாதங்களையுடையது. அவற்றுள் ஞானபாதமானது பதின்மூன்று பிரகரணங்களையுடையது.

முன்னொருகாலத்து துர்மதன் என்ற அசுரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர்க்கேற்பவே கள் குடித்தல் முதலிய மாபாதங்களை யுடையவனாய்

விளங்கினன். ஆனாலும் காசிப சந்ததியாகலின் வேதாத்தியயனம் செய்துவந்தான். அவன் கடவுளை நோக்கித் தவஞ்செய்து 'என்னல் ஆயுதம் என்று அறியப்பெற்றவைகளால் எனக்கு மரணம் நேர்தல் கூடாது' என்று வரங்கேட்டான். வேண்டியதைப் பெற்றான். அதனல் அவன் இருடிகட்கும், முனிவர்கட்கும் செய்த இன்னல்கள்பல. இருடிகள் இவனுடைய கூடாவொழுக்கத்தைக் கண்டு இவனைத் தண்டித்து இன்னலை நீக்கும் வண்ணம் இந்திரனை வேண்டினர். இந்திரன் அவ்வாறே இருடிகளுக்கு வாக்களித்தனன். அசுரன் ஒரு நாள் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்தான். இதனையறிந்த இந்திரன் கடல் நுரையில் தனது வச்சிரத்தைத்தோய்த்து நுரையில் மறைத்து வீசி அவனைக்கொன்றான். உடனே பிரமகத்தியானது இந்திரனைத் தொடர்ந்தது. இந்திரன் வருந்தி விஷ்ணுவை நோக்கித் தவஞ்செய்தான். விஷ்ணு வெளிப்பட்டு அவன் குறையை யறிந்து ஒரு சிங்கத்தின்தோலைக்கொடுத்து 'இதனைப்போர்த்திக் கொண்டு பரமேசுரனைக் குறித்துத் தவஞ்செய்; பரமேசுவரன் வெளிப்பட்டு உனது அதிபாதகத்தைப் போக்கியருளுவார்' என்று சொல்லி மறைந்தார். இந்திரன் அவர் ஆணைப்படிச் சிங்கத் தோலைப் போர்த்திக்கொண்டு ஆயிரம் ஆண்டு தவஞ்செய்தான். பரமேசுவரன் இந்திரனுக்குக் காட்சியளித்து அவனுடைய மனச்சஞ்சலத்தைப் போக்கத் திருவுள்ளங்கொண்டு காமிகாகமத்தைச்

சுருக்கிப் பதிஞேராயிரம் கிரந்தமுடைய ஆகமமாக உபதேசித்தருளினர். இந்திரன் தான்பெற்ற மிகத்தெளிவான இந்த ஞானமார்க்கத்தைப் பரத்வாஜ மகரிஷி வேண்ட அவர்க்கு அளித்தான். அவர் ஹாரீதருக்கு அளித்தார். இவ்வாருக இந்த ஆகமம் சந்ததிக்கிரமத்தில் வருகிறது.

இவ்வரலாற்றையே, விருத்திரஹத்தி தோஷம் போக்கிக்கொள்ள இந்திரன் தவம்செய்ததாகவும், அதன் பயனுகப் பரமேசுவரன் காமிகத்தை யுபதேசிக்க, இந்திரன் சிங்கத்தோல் போர்த்திக் கொண்டு கேட்டதாகவும், அதனுல் இந்த ஆகமம் மிருகேந்திரம் என வழங்கப்பெறுவதாகவும் கூறும் வழக்காறுண்டு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து நான்காவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் சைவசந்நியாசம் பெற்று ஐந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகரிடம் ஞானுபதேசமும் பெற்ற ஸ்ரீமத் வெள்ளியம்பலவாண சுவாமிகள் இவ்வாகமத்தை மொழிபெயர்த்தருளினுர்கள். இவர்கள் மிருகேந்திரம் முழுமையுமே மொழிபெயர்க்கத் தொடங்கினுர்களென்பதும், அதிலும் ஞானபாதத்தை விரிவாகவும் ஏனையமூன்றையும் சுருக்கமாகவும் மொழிபெயர்த்தார்களென்பதும்,

ஞான பாத நவின்றுழி நின்ற
ஏனை மூன்று மியன்றன சுருங்கத்
தருகென வேண்டலுந் தந்தன னந்த
மிருகேந் திரத்தை விளங்குமா ரூரின்
வையக முய்ய வருசம் பந்தன்
மெய்கண் டவனென வெய்தும் பெயரினன்
புலியூ ரிருந்து பொதுநடங் கண்டு
தொலையா மும்மலந் தொலைய நாளுங்
கிளர்தவ நெறியொடு கேடில்வான் புகழ்
வளர்வெள் ளியம்பல வாணமா முனியே.

என்னும் இந்நூற் பகுதியால் விளங்கும்.

இம்மொழி பெயர்ப்புநூலில்முதற்கண் பாயிரங்கள் இரண்டு அமைந்துள்ளன. அவைகளுள் சிறப்புப்பாயிரத்துள் குருதெய்வ வணக்கங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தற்சிறப்புப்பாயிரத்துள், நூல்செய்யக் காரணமும், இந்நூல் கேட்டற்குரியார் ஞானவரண நன்னெறி நிற்கும் ஆனவறிவினரென அதிகாரிகளும், நூல்வந்தவழியும், தனது சந்ததியும் குறிக்கப்பெற்றுள்ளன. பொதுப்பாயிரத்திலக்கணத்துள் ஏனைய இலக்கணநூல்களிற் குறிப்பன போலாது ஞானநூல்களை உபதேசிக்கும் ஆசாரியர், கேட்கும் மாணவர், சொல்லும் நிலைமை, கேட்கும் நிலைமை ஆகிய இவைகளைச் சமயவரம்பிற்குரிய செந்நெறியிற் கூறியிருப்பது இன்புறுதற்குரியது. இவற்றுட் சிறப்பாக ஞானநூல்களை ஓதலாகாத நாள்களைக்கூறும் பகுதியும், பதிநூல் பயில்வார் தமது இனத்தோடல்லாது புறவினத்தாரோடு

பேசாமல் அநுபவத்தில் அறிவை நிறுத்திச் சிறந்துழிநின்று சிந்திக்கவேண்டும் என்றபகுதியும் மிக இன்புறத்தக்கனவாம்.

இந்நூல், ஆசிரியரது மொழிபெயர்ப்புத்திறன் தெற்றெனப் புலப்படவே வடமொழிச்சுலோகமும் தென்றமிழ்ச் சூத்திரமும் விரவப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இச்சூத்திரங்கள் வடமொழிச் சுலோகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் நேரிய மொழி பெயர்ப்பாக இருப்பது நினைத்தற்குரியது.

இந்த மொழிபெயர்ப்புநூல் ஆதீன நூல் நிலையத்தில் உள்ள ஏட்டுப்பிரதியில் இருந்து எடுத்து எழுதப்பெற்றது. இதன் இறுதியிலுள்ள பசுபடலத்தின் ஏழு சூத்திரங்கள் காணப்பெற வில்லை. இந்தக்குறை முத்திநிச்சயப் பேருரையை ஆராய்கின்ற காலத்து அதிற்கலந்துள்ள ஏடொன்றில் காணப்பெற்ற ஏழு சூத்திரங்களான் நீங்கிற்று. இதில் இப்போது கிடைத்தன வித்தியா பாதத்து உபோற்காதபடலம், பரமோட்ச நிராச படலம், பதிபடலம், சிருட்டியாதிபடலம், அநுக் கிரகப்படலம், பசுபடலம் என்பனவாம். ஏனையவும் குருஞான சம்பந்தர் திருவருளால் கிடைக்குமாயின் சைவத்தமிழுலகம் அறிந்துய்ய வெளியிடப்பெறும்.

முப்பத்திருவகைத் தானங்களுள் வித்தியா தானமும் அதற்கேற்ற புத்தகதானமும் சிறந்தன

என்பது உலகமறிந்த உண்மை. அதிலும் திருமுறைதானம் மிகச்சிறந்தது. அதிலும் பதிவாக்காகிய ஆகமங்களை அச்சிட்டு வழங்குதல் மிகச் சிறந்தது. அத்தகைய ஞானதான வள்ளன்மையை இடைவிடாது இயற்றிவருபவர்கள் தருமபுர ஆதீனத்தில் இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி நடாத்தும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ஆவார்கள். இவர்கள், ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகளுடைய அருட்பெருஞ் சீடராக விளங்கி அவர்கள் திருமுன்பே சிவயோக சமாதியிலிருந்து காட்டிய இரண்டாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்த பரவசமூர்த்திகள் கண்கண்ட தெய்வமாக, வேண்டியது விளைக்கும் பிரார்த்தனைக் கடவுளாக, கருத்தறிந்து முடிக்கும் கலியுகவரதராக எழுந்தருளியிருக்கின்ற இயல்பைத் திருவுளத் தடைத்து, அவர்கட்கும், வடபுறம் விளங்கும் கூகூ-வது ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசகதேசிகமூர்த்திக்கும், தென்புறம் விளங்கும் உசா-வது ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக மூர்த்திக்கும் திருக்கோயில்கள் புதிதாகஎடுப்பித்து விய ஆண்டு வைகாசித்திங்கள் உகூ-ம்நாள் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார்கள். **இந்நூல் ஆனந்தபரவசர் ஆலய கும்பாபிஷேக நினைவுவெளியீடாக** வெளிவருகிறது.

இவ்வாறு பல்லாற்றானும் பணிபுரிந்துவரும் இவர்கள் அருட்செங்கோல் நீடுவாழ்ந்து, இதுபோல்

வெளிவராதிருக்கின்ற இன்னும் பல மூலாகம உபாகமங்களை வெளிப்படுத்தி, அதனால் தெய்வத் தமிழுலகம் உய்யச்செய்வதாகுக என்று எல்லாம் வல்ல கந்தனதடியைச் சிந்திக்கின்றேன்.

கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே.

இங்ஙனம்,
தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்,
தமிழ்ப்பேராசிரியர், திருப்பனந்தாள்,

தருமபுரம்,
2—6—46.

தருமபுர ஆதீனம்

இரண்டாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச மூர்த்திகள்

ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்ற பின்பே இவர்கள் வரலாறு நாம் அறிந்துய்யும் நிலையுடைத்தாயிற்று. இவர்கள் தமது பெயரமைதிக்கேற்ப, குருமூர்த்திகள் காட்டியருளிய குறிவழிநின்று சிவாநந்த பெரும்போகத்தழுந்தித் தன்வசம் அழிந்து இருந்தார்கள். இவர்கள் தாம்பெற்ற குருரூபசிந்தனையாகிற சிவாநந்தாநுபவ நிலையை மற்ற அடியார்கட்கும் சொல்லாமற் சொல்லிக் காட்டாமற் காட்டிவந்தவர்கள்.

இவர்களுடைய அநுபூதிநிலையை ஆசாரிய மூர்த்திகளாகிய குருஞானசம்பந்தப் பெருமானே, சச்சிதானந்தமூர்த்திகட்குப் பரிபக்குவம் வரப் பண்ணுமுகத்தான்,

"தானந்த மாதிநடு வில்லா தோங்கும்
சச்சிதா நந்தமயந் தானேயாய
ஆனந்த பரவசனைக் கண்டுங் கண்டும்
அந்தந்தோ பர்கதியை யறிந்திரில்லை"

என்று திருவாய்மலர்ந்தருளிய திருப்பாடலே நன்கு விளக்கும்.

இவர்களைத் தமது ஞானபீடத்து இருத்திச் சந்தானம் பாலித்தருள ஆணைதந்து குருஞான சம்பந்த தேசிக மூர்த்திகள் சிவயோக சமாதியில் எழுந்தருளினார்கள். ஆனந்தபரவச மூர்த்திகள் அதிதீவிரதர பக்குவர்களாதலின் குருவினுடைய சமாதித்தான ஆலயத்திற்கு மேற்கே அவர்கள் திருக்கோயில் சிகரத்தைப் பார்த்தவண்ணமாகச் சிவயோகசமாதியில் எழுந்தருளியுள்ளார்கள்.

இவர்கள் சமாதித்தானம் ஒரு பிரார்த்தனைத் தலமாக வழங்கிவருவதும், இந்தப்பக்கத்திலுள்ளார் அனைவருக்கும் ஆனந்தபரவசர் என்றாலே ஒரு அச்சமும் அன்பும் கலந்த உளநிலை உண்டாவதும், அதனால் அவர்கள் இம்மை மறுமைப்பயன் எய்தி வருவதும் கண்கூடாதலின் இவர்கள் மகிமை எம்மனோரால் சொல்லும்தரத்ததன்று.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உடு-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

மிருகேந்திரம்

சிறப்புப்பாயிரம்

மலைமகள் கொழுநன் மைந்தர் நங் குரவர்
கலைமகள் சேவடி கருதுதுந்
தலைமை சான்றசெந் தமிழ்பெறற் பொருட்டே.

கடல்புடைக் கிடந்த கண்ணகன் ஞாலத்து
வடமொழி பயிலாத் தமிழறி மாந்த
ரத்தர் திருமுக மைந்தினு மருளுஞ்
சுத்த சைவம் வைத்த விரண்டின்
ஞானு வரண நன்னெறி நின்ற
வானு வறிவி னவர றிந் தொழுக
வுயர்சிவ ஞான போத முதலிய
மயர்வறு புலவர் வகுத்தனர் தமிழின்
மிகுபரி பாக மிலா தவ ரொழுகத்
தகுகரு மாந்த நெறிபல வற்று
ளொருநிலை தமிழ்நாட் டுள்ளதை யுணரப்
பெருநூல் பலவினும் பிறங்கு முதனூல்
வழிவரு மொன்று வைதிக ரெடுத்து
மொழிவது தமிழின் மொழியுங் காலை
ஞான பாத நவின்றுழி நின்ற
வேனை மூன்று மியன்றன சுருங்கத்

தருகென வேண்டலுந் தந்தன னந்த
மிருகேந் திரத்தை விளங்குமா ரூரின்
வையக முய்ய வருசம் பந்தன்
மெய்கண் டவனென வெய்தும் பெயரினன்
புலியூ ரிருந்து பொதுநடங் கண்டு
தொலையா மும்மலந் தொலைய நாளுங்
கிளர்தவ நெறியொடு கேடில் வான்புகழ்
வளர்வெள் ளியம்பல வாணமா முனியே.

பாயிரம்

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே. க

அதுவே,
பொதுவுஞ் சிறப்பு மெனவிரு பாற்றே, உ

பனுவலுங் குரவர் பகரு நிலைமையும்
புதல்வருங் கோடற் பகுதியும் பேறதும்
மற்ற சிறப்பியல் அவற்றொடு வருமே. ங

பொதுநா லியல்பிற் பொருந்துவ பொருந்த
முதனூல் வழிநூ லென்றிரண் டாகிச்
சூத்திரம் படலங் காண்ட மிவற்றின்
பாற்பட நின்று பல்வகைப் பொருளு
மூன்றி னடங்க மொழியு நிலையொடு
தோன்று மாறு சொல்லு மாணையி
னுயர்நிலத் தெழுந்த பழமறை யாகி
யியலு மென்ப விறைவ னாலே. ச

முதனூல் காமிக முதலிய வென்ப. ரு

நாரசிங்க முதலிய வழிநூன்
மூலந் தொகுத்து மொழியவந் தனவே. சு

மூவகை யானு மொழிவது சூத்திரம். எ

வித்தே போன்மனம் விரிய நூற்பொருள்
வைத்துநன் மொழியொடு வருவது மூலம். அ

உத்தே சத்தை யுணர்த்துங் காலை
வைத்தமூ லத்து வந்தன வற்றின்
பெயரொடு பிறவும் பேசுவ தன்றி
அயல்பு முணர்த்து மென்மனர் புலவர். கூ

ஒழிந்தன வெல்லா முரைச்சூத் திரமே. க0

ஒருவழி யொருநெறி பொருள்படத் தோன்றிற்
படல மென்று பகரப் படுமே. கக

படலஞ் சிறந்த பாதங் காண்டம். கஉ

இருவகை யானு மியலுந் தந்திரம். கங

குருவெனப் படுபவன் கூறுங் காலை
மடமே மரமே கோத்திரங் கோசரந்
தொழிலே பிறவுஞ் சொல்லிய மரபிற்
கருமா வரண நெறியின் றொழுகி
வருவோ னென்ப வயங்கி யோரே. கச

நூல்சொ லியல்பு நுவலுங் காலை
நீரா டுதன்முத னியம மியற்றி
விலக்கிய பலவும் விலக்கி விதித்த

கால நிலைமை கருதிக் குரவர்
மறுத்தெதி ரெடுத்தன் மலநீ ரடக்கல்
புளித்தேக் கிடலிவை போல்வன பிறவும்
வாலி தல்லன மாற்றிப் பசுவினஞ்
சேர்விட மன்றிச் சிறந்துழி யிருந்து
கருது மிரண்டி ெனுருதிசை நாடிப்
பருதியி னரனைப் பணிந்து பிறரையும்
வரனுறு ஞான மற்றைய வற்றெடு
திகழ்பீ டிகையிற் றிருமுறை வைத்து
வெகுளி முதலிய விட்டருள் சுரந்து
மைந்தனைக் கேளென வைத்துத் தத்தஞ்
சந்ததி நிலைமை சாற்றி யவற்குத்
தொடர்பொருள் பயனொடு தோன்றமுற் கூறி
நடைபெறு முறையி னவிலுதல் கடனே. கரு

அவ்வழிச்,
சூத்திரத் தெல்லை சொல்லுங் காலை
யொன்றே யன்றி யிரண்டு மூன்று
மென்ற விவற்றி னிறவா தியலு
மிறந்துழி யிடையூ றெய்து மென்ப. கசா

விலக்கின வற்றை விரிப்பிற் சந்தியும்
ஈரிரு திதியு மாறிரு திங்களின்
முந்திய பகலு மொழிதிசைத் தாபமு
நீணிலத் துளக்கும் வானிடை யதிர்ப்புங்
கன்மழை பொழிதலு முற்கை விழுதலும்
விண்ணெழு கதிர்ப்பரி வேட மிடுதலுங்
குடதிசை யிந்திர வில்லொடு கூடலு
மினையன பிறவு மெய்திய வைகலுங்

காந்தருவ நகரங் காண்டல் பெரும்பனி
வார்ந்திட லெழுந்து வருபெருங் காற்றுச்
சாவு பறைபிற தாநிகழ் பொழுதும்
பூணை தவளை யிடைப்புகுங் காலமு
மொன்றி ரண்டுமூன் றுடைய தலைப்பாம்
பென்றிவை யெய்தி னித்துணைப் பொழுதுங்
கதிர்முளை யாவெழக் காணினும் மற்றும்
பரமர் விழவெழப் பண்ணிய ஞான்று
மிந்திரன் முதலோர்க் கெய்திய விழவி
னைந்து தினமு பாசௌ சங்களுஞ்
சிவபத மடையிற் றேசிகர் திங்களு
மவர்வழி யொன்றெனு மடிகளுந் தன்வழி
வருமா ணாக்கனும் பொழுதொரு மூன்று
இறைசை வத்தெனின் ஏழுநாளும்
ஏனையர் இறந்துழி மூன்றுநா ளென்னப்
படுவன வாமெனப் பகர்ந்தன நூலே. கஎ

அளவை மொழிதொடர் நிலைகளை யுணர்த்துங்
கருவியும் பிறவுங் கருமா வரண
நெறிநின் றொழுகு நியமமுங் குரவர்
வழிநின் றொழுகும் வாய்மையு முடையோ
ரிறைநூல் கற்த மியல்பின ரென்ப. கஅ

நூல்கொளு மரபு நுவலிற் குரவ
ரீத லியல்பி னியைவன புரிந்து
செவ்வி தெரிந்து சென்றுதங் குரவர்க்
கிவ்வகை கருத்தென் றியற்றுவ தியற்றிக்
கடவுளர் திருமுறை குரவரென் றிவரை
வழிபடு மரபின் வணங்கியக் குரவர்
கைகாட் டியவழி யிருந்து திருந்தியல்

சொல்லெனச் சொல்லி வினவுழி மெல்லத்
தொடர்வுறு மரபிற் றோன்றக் கூறி
நடைபெறு முறையி னவின்றதுட் கொண்டு
முடிவினும் வணங்கியக் குருவருள் பெற்று
விடைகொளல் கடனென விளம்பினர் புலவர். கசு

இறைநூல் பயிலி னினத்தோ டன்றிப்
பிறவழி யவரொடு பேசாது கரந்து
சைவ நெறியிற் றருக்கமோ டியைய
மெய்ம்மை நாடி வினைவி னிறுத்தி
மறந்து மவைகளின் வாய்மல ராது
சிறந்துழி யிருந்து சிந்திப் பதுவே. உ0

இருவரு மிம்முறை யியலா ராயின்
மறுமையு மிம்மையும் வாயா தொழுகி
னிருமையு நன்மையென் றியம்புவர் புலவர்? உக

சிறப்புத் தற்சிறப் பொடுமிரு வகையி
னியற்பா யியலு மென்மனார் புலவர். உஉ

அவற்றுள்,
தனக்கியை புடையோர் தாமெடுத் துரைக்குஞ்
சிறப்புப் பாயிரஞ் செப்புங் காலை
யாக்கியோன் பெயரே யளவு காரண
நூற்பெயர் பயனென் றிவற்றொடு வருமே. உங

கடவுள் வணக்கமுங் கருதிய பொருளும்
வினைமுதன் மொழிவது தற்சிறப் பாகும். உச

பகரு மிருவகைப் பாயிரத் தியல்பும்
பிறிதொடு படினும் பேணினர் கொளலே. உரு

பாயிரம் முற்றியது.

திருச்சிற்றம்பலம்,

ஞானபாதம்

முதலாவது உபோற்காத படலம்

परमेशं नमस्कृत्य भरद्वाजमृषिं ततः ।
हरादिन्द्रक्रमायातं ज्ञानं शृणुत सुव्रताः ॥ १

பரமே சனையும் பரத்து வாச
முனியையு மிறைஞ்சி முதல்வ னிந்திரன்
வழிவரு ஞான மாதவர் கேண்மி
னெனவா ரீத ரிவர்க்கியம் பினரே. க

नारायणाश्रमे पुण्ये भरद्वाजादयो द्विजाः ।
तेपुः शिवं प्रतिष्ठाप्य तदेकाहितमानसाः ॥ २

திருமால் வனத்துச் சிவனை யருச்சித்
தொருமையிற் பரத்து வாசர் முதலிய
விருபிறப் பாள ரியற்றினர் தவமே. உ

अथ तान्भावितान्मत्वा कदाचित्त्रिदशाधिपः ।
तदाश्रमपदं भेजे स्वयं तापसवेषभृत् ॥ ३

அவ்வழி,
யிந்திர னொருஞான் றிவரியல் புணர்ந்து
வந்தன னருந்தவ வடிவ மெய்தி. ௩

स तैः संपूजितः पृष्ट्वा तांश्च सर्वाननामयम् ।
प्रोवाच चोदनाधर्मः किमर्थं नानुवर्त्यते ॥ ४

அந்தணர் பூசைகொண் டிந்திர னவர்க்குத்
தனித்தனி குசலஞ் சாற்றிச் சோதனை
யறத்திய லாவிலை யாதுகொ லென்றனன். ௪

त ऊचुर्नन्वयं धर्मश्चोदनाविहितो मुने ।
देवताराधनोपायस्तपसाभीष्टसिद्धये ॥ ५

கருதிய பெறற்குத் தகுதவ நெறியாற்
புரிவது கடவுளர் பூசை. மற்றிது
சோதனை விதியிற் சொல்லிய வறமென
வேதிய ருரைத்து விளம்பினர் பின்பும். ௫

वेदेऽस्ति संहिता रौद्री वाच्या रुद्रश्च देवता ।
सांनिध्यकरणेऽप्यस्मिन्विहितः काल्पिको विधिः ॥ ६

உருத்திர சங்கிதை யுண்டு வேதத்
தருத்தமுங் கடவு ளுருத்திர னவன்வந்
தெதிர்ப்படு விதியு மியம்புங் கற்பம். ௬

इत्युक्तेऽपि परं भावं जिज्ञासुः प्रहसन्प्रभुः ।
तानाह मिथ्या ज्ञानं वः शब्दमात्रं हि देवता ॥ ७

என்றலும் பின்னுற விவர்கருத் தறிய
நின்றவ னகைத்து நிகழ்த்துவ னுமக்கு
மித்தை ஞானம் வேறில தேவதை
சத்த மன்றிச் சாற்றுத லான. ௭

शब्देतरत्वे युगपद्भिन्नदेशेषु यष्टृषु ।
न सा प्रयाति सांनिध्यं मूर्तत्वादस्मदादिवत् ॥ ८

சொல்லி னன்றெனி நிகழ்பொழு தொன்றின்
எல்லையில் யாக மியற்றுழி யெல்லாம்
போக லாற்றார் புவன சரீரக
ளாதலி னமைப்போ லக்கட வுளரும். ௮

न च तत्साधकं किंचित्प्रमाणं भात्यबाधितम्।
वाक्यं तदन्यथासिद्धं लोकवादाः क्व साधवः॥ ९

உண்டெனக் கடவுளை யுணர்த்து மளவை
நன்றென வொன்றில் நன்மொழி நிலையு
மன்றெனப் பொருள்படும் அகலிடத் தவர்சொ
லென்கொ லாகுவ தென்றியம் பினனே. ௯

इत्यनीशवचोवारिवेलानुन्नोऽब्धिनेव सः।
शक्रेण न चचालैषां धीशैलः सारगौरवात्॥ १०

இத்திறங் கடனிக ரிந்திர னுவன்ற
கத்தனில் வாதக் கடுந்திரை யலைத்தும்
உலைவின்று அந்தண ருணர்வெனுங் குன்று
வலிமையும் பெருமையு முடைமை யான. ௧௦

न जातु देवतामूर्तिरस्मदादिशरीरवत्।
विशिष्टैश्वर्यसंपन्ना सातो नैतन्निदर्शनम्॥ ११

திருவிற் சிறந்த தேவதை யுருவ
மெமதுருப் போலு மென்றதொன் றன்றே. ௧௧

अथास्त्वेवं घटे न्यायः शब्दत्वादिन्द्रशब्दवत्।
नादत्ते घटशब्दोऽम्भश्चन्द्रशब्दो न राजते॥ १२

அவ்வா றுதல் கடத்தினும் வேண்டுஞ்
சொல்லா தலினிந் திரனெனுஞ் சொற்போல்
கடமெனு மொழிநீர் கவரா தவிரொளி
தாநிகழ்த் தாது சந்திர னெனுஞ்சொல். ௧௨

अथान्यविषयं वाक्यमस्तु शक्रादिवाचकम् ।
कर्मरूपादिशब्दानां सार्थकत्वं कथं भवेत् ॥ १३

வினைகுவ தாக வேறு பொருணிலை
மொழியு மிந்திரன் முதலிய சொற்குத்
தொழில்குண முதலிய சொற்களுக் கெங்ங
னுறுபொருள் கோட லுணர்த்துங் காலே. கங

प्रवादोऽप्यखिलो मिथ्या समूलत्वान्न युक्तिमत् ।
स चेदमूलो भूतानां हताः सर्वाः प्रवृत्तयः ॥ १४

முழுது முலக மொழிவது பொய்யெனல்
அளவி னியலா தாதலின் மூலம்
மூல மில்லென மொழியினும் பொய்யெனல்
சாலவுங் கெடுமே யுயிர்வினை தாமே. கச

उपमन्युर्हरं दृष्ट्वा विमन्युरभवन्मुनिः ।
कथं तस्य वचो मिथ्या यस्य वश्यः पयोनिधिः १५

ஒருசிறு முனிவ னரனருள் பெற்றனன்
படிறன் றவன்மொழி படர்தலிற் பாற்கடல். கரு

क्रोडीकृतो हि पाशेन विषज्वालावलीमुचा ।
हुङ्कृत्य मोचितः पत्या दृष्टः श्वेतो घनैर्जनैः ॥ १६

பதியங் கிறுதியிற் பலருங் காணக்
கடுவுமிழ் பாசம் விடமுனிக் கருளினன். கசு

इति वादानुषङ्गेण हरशंसाप्रहर्षितान् ।
साश्रुगद्गदवाचस्तान्वीक्ष्य प्रीतोऽभवद्धरिः ॥ १७

எனவர னிலைமை யியம்புமா தரவின்
விழிநீர் வார மொழிதடு மாற
நின்றன ரிந்திரன் கண்டுவந் தனனே. க௭

स्वं रूपं दर्शयामास वज्री देवः शतक्रतुः ।
तरुणादित्यसंकाशं स्तूयमानं मरुद्गणैः ॥ १८

இவரெதி ரிந்திர னிமையோர் வழுத்தக்
கதிர்புரை மேனி காட்டிநின் றனனே. க௮

ते तमृग्भिर्यजुर्भिश्च सामभिश्चास्तुवन्नताः ।
सोऽब्रवीदुच्यतां कामो जगत्सु प्रवरोऽपि यः ॥ १९

பணிந்தனர் மறையிற் பரவினர் முனிவர்
சிறந்தது கொள்கெனச் செப்பின னிறைவன். க௯

ते वव्रिरे शिवज्ञानं श्रूयतामिति सोऽब्रवीत् ।
किंत्वेकोऽस्तु मम प्रष्टा निखिलश्रोतृसंमतः ॥ २०

அவர்சிவ ஞான மருளென விறைவன்
பனுவல் கொள்ளும் பண்பின னொருவ
னுமதரு ளாக வெனநுவன் றனனே. ௨௰

अथ तेषां भरद्वाजो भगवानग्रणीरभूत् ।
वाग्मी प्रगल्भः पप्रच्छ न्यायतः सुरपूजितम् ॥ २१

அவரிற் சிறந்தோ னறிவழிந் துரையிற்
பகரு மரபினன் பரத்து வாச
னண்ணலை யிந்நிலை யாதென வினவினன். ௨௧

कथं महेश्वरादेतदागतं ज्ञानमुत्तमम्।
किं च चेतसि संस्थाप्य निर्ममे भगवानिदम्॥ २२

இறையி னெங்ங னியன்றது ஞான
முறையினேன் கருதி மொழிந்தன னன்றே. உஉ

सृष्टिकाले महेशानः पुरुषार्थप्रसिद्धये।
विधत्ते विमलं ज्ञानं पञ्चस्रोतोऽभिलक्षितम्॥ २३

உணர்த்துமின் னிந்திர னுலகினை யிறைவன்
படைப்புழி யுயிர்கள் பயனடை தற்கு
வகுத்தன னைவகை யால்வரு ஞானம். உ௩

तद्वर्तिवाचकत्रातवाच्यानष्टौ महेश्वरान्।
सप्तकोटिप्रसंख्यातान्मन्त्रांश्च परमेऽध्वनि॥ २४

अष्टादशाधिकं चान्यच्छतं मायाधिकारिणाम्।
मन्त्रेश्वराणामूर्ध्वाध्वस्थितेशोपमतेजसाम्॥ २५

தந்திர நுவலு மந்திரப் பொருளென
வருகின் றவரென மகேசுர ரோடு
மிறைதந் தனன்மந் திரரெழு கோடியும். உ௪

மேனில வேந்தர்க் கிணையென வந்து
மாயையி னியையு மந்திர வேந்தர்
தாமொரு நூற்றுப் பதினெண் மரையும். உ௫

तेषु व्यक्तः स भगवानिदं योग्येषु सिद्धये।
प्रकाशयत्यतोऽन्येषु योऽर्थः समुपपद्यते॥ २६

அவர்வயி னின்றர னருளு ஞான
மிதன்வழி யொழுகுந ரெண்ணின வெய்தப்
பிறரெனி னருளும் பிறர்வயி னின்றே. உ௬

शिवोद्गीर्णमिदं ज्ञानं मन्त्रमन्त्रेश्वरेश्वरैः ।
कामदत्वात्कामिकेति प्रगीतं बहुविस्तरम् ॥ २७

இதுவிரிந் தியல விறைவ னுவன்றது
பெறுமந் திரத்திற் பெரியோர் கண்டு
கருதுவ தளித்தலிற் காமிக மென்றவா. உஎ

तेभ्योऽवगत्य दृग्ज्योतिर्ज्वालालीढस्मरद्रुमः ।
ददावुमापतिर्मह्यं सहस्रैर्भवसंमितैः ॥ २८

அவர்பாற் பெற்றிங் கருவொடு மதனைப்
பதினோ ராயிரம் பாடலி னடங்க
வுமைமகள் கொழுந னுணர்த்தின னெனக்கே. உஅ

* * * २९

நார சிங்க மெனநா னின்று
கோடலி னஃதப் பெயர்க்கொடை பெறுமே. உகூ

तत्रापि विस्तरं हित्वा सूत्रैः सारार्थवाचकैः ।
वक्ष्ये निराकुलं ज्ञानं तदुक्तैरेव भूयसा ॥ ३०

அப்பெய ரானே மிருகேந் திரமென
முற்பட விரிந்த மொழியொடு நின்றன
வன்றிச் சுருங்கு மடைவின வெடுத்தீண்
டொன்றின மரபி னுணர்த்துவன் மிகவு
மென்று முனிவர்க் கியம்பின னாலே. ௩௰

முதலாவது உபோற்காத படலம் முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது பரமோட்ச நிராச படலம்

अथानादिमलापेतः सर्वकृत्सर्वविच्छिवः ।
पूर्वव्यत्यासितस्याणोः पाशजालमपोहति ॥ १

சிவனறிந் தியற்றுந் திறமுழு துடையோ
னிருமல னன்றே நிகழ்மலத் தொகுதியின்
வேறுபடு முயிர்க்கு வீடருள் செயுமே. ௧

त्रिपदार्थं चतुष्पादं महातन्त्रं जगत्पतिः ।
सूत्रेणैकेन संगृह्य प्राह विस्तरशः पुनः ॥ २

பகருமுப் பொருளும் பாத நான்கும்
பெறநிகழ்த் துவது பெருநூன் முழுது
முரைத்துச் சூத்திர மொன்றிற் சுருங்க
விரித்தனர் புவன வேந்தர் மீண்டே. ௨

जगज्जन्मस्थितिध्वंसतिरोभावविमुक्तयः ।
कृत्यं सकारकफलं ज्ञेयमस्यैतदेव हि ॥ ३

படைத்த லிறுத்த லழித்தன் மறைத்தல்
விடுத்தல் கருவியின் வினைபய னோடு
மியற்றுவ துலகிற் கிறையது தொழிலே. ௩

तेन स्वभावसिद्धेन भवितव्यं जगत्कृता ।
अर्वाक्सिद्धेऽनवस्था स्यान्मोक्षो निर्हेतुकोऽपि वा ॥ ४

ஈச னாதி நிருமல னியல்பின்
ஆதி நிருமல னெனிலநவத்தை
யேது வின்றிவீ டெய்தவும் படுமே. ௪

चैतन्यं दृक्क्रियारूपं तदस्त्यात्मनि सर्वदा ।
सर्वतश्च यतो मुक्तौ श्रूयते सर्वतोमुखम् ॥ ५

சித்தொடு செய்தி வடிவுசே தனநிலை
நித்த முயிர்வயி னிகழுமெத் திசையு
முத்தியி னெங்கு முகமெனக் கேட்டலின். ௫

सदप्यभासमानत्वात्तन्निरुद्धं प्रतीयते ।
वश्योऽनावृतवीर्यस्य सोऽत एवऽऽविमोक्षणात् ॥ ६

உயிர்க்குண் டாயினு மதுதோன் றாமையிற்
றடுப்பதுண் டாகலிற் றடைதீர் கடவுள்
வழிப்படு மொன்று வருமுன் னுயிரே. ௬

प्रावृतीशबले कर्म मायाकार्यं चतुर्विधम् ।
पाशजालं समासेन धर्मा नाम्नैव कीर्तिताः ॥ ७

ஈச னருளு மிருளுங் கருமமு
மாயையும் பாச சாலந் தொகுத்துக்
கூறிய நான்குந் தாமினிது விளங்கும். ௭

इति वस्तुत्रयस्यास्य प्राक्पातकृतसंस्थितेः ।
चर्यायोगक्रियापादैर्विनियोगोऽभिधास्यते ॥ ८

எனமுற் பாதத் தியம்புமுப் பொருளின்
விநியோ கத்தை விளம்புங் காண்டங்
கிரியை யோகஞ் சரியை மூன்றுள். ௮

विनियोगफलं मुक्तिर्भुक्तिरप्यनुषङ्गतः ।
परापरविभागेन भिद्येते ते त्वनेकधा ॥ ९

விநியோ கத்தின் வினைப்பயன் முத்தியும்
இடைநிகழ் போகமு மென்ற விரண்டும்
பரம பரத்தாற் பலமர பினவே. ௯

वेदान्तसांख्यसदसत्पादार्थिकमतादिषु ।
ससाधना मुक्तिरस्ति को विशेषः शिवागमे ॥ १०

வேத முடிவும் வேறுபிற நிலையுஞ்
சாதன வகையு முத்தியுஞ் சாற்றலி
னேனையிந் நூல்சிறப் பென்னென வியலும். ௧௦

प्रणेत्रसर्वदर्शित्वान्न स्फुटो वस्तुसंग्रहः ।
उपायाः सफलास्तद्वच्चैवे सर्वमिदं परम् ॥ ११

முழுது முணரா மொழிவன வற்றின்
பொருள்பயன் மற்றும் புலப்பா டிலவே
யானுவல் மரபி னியாவையும் பரமே. ௧௧

வேதாந்தி சங்கற்பமும் – நிராகரணமும்.

वेदान्तेष्वेक एवात्मा चिदचिद्व्यक्तिलक्षितः ।
प्रतिज्ञामात्रमेवेदं निश्चयः किंनिबन्धनः ॥ १२

அருமறை யந்தத் தான்மா வொன்றஃ
திருவகை சடசித் தெனவரு மென்னில்
வாய்மொழி யன்றி மான மின்றே. ௧௨

अथ प्रमाणं तत्रात्मा प्रमेयत्वं प्रपद्यते ।
यत्रैतदुभयं तत्र चतुष्टयमपि स्थितम् ॥ १३
अद्वैतहानिरेवं स्यान्निष्प्रमाणकतान्यथा ।
भोगसाम्याविमोक्षौ च यौ नेष्टावात्मवादिभिः ॥ १४

மான முண்டெனி லான்மா மேயமென்
றுத லின்னெனை யவற்றொடு நான்கெனக்
கூறலி னென்றெனல் கூடா தன்றெனின்
மான மின்றென வந்தது வருமே. கங

போக சாமியம் புகல்வதை யன்றி
வீடு சேர்தலும் வேண்டா வெனவரும். கச

சாங்கியர் சங்கற்பமும் — நிராகரணமும்.

सांख्यज्ञानेऽपि मिथ्यात्वं कार्ये कारणबुद्धितः ।
अकर्तृभावाद्भोक्तुश्च स्वातन्त्र्यादप्यचिद्गतः ॥ १५

சால மயங்குஞ் சாங்கிய நூலுங்
காரிய மென்பதைக் காரண மெனவும்
போக நுகரும் புருடனைச் செய்பவ
னாக வேண்டா தசேதனத் திற்கு
மாறுபடு முதன்மையுங் கூற லான. கரு

ஆசீவகர் சங்கற்பமும் — நிராகரணமும்.

इह सप्त पदार्थाः स्युर्जीवाजीवास्रवास्त्रयः ।
संवरो निर्जरश्चैव बन्धमोक्षावुभावपि ॥ १६
स्याद्वादलाञ्छिताश्चैते सर्वेऽनैकान्तिकत्वतः ।

உயிரு மில்லது முற்றுஞ் செறிப்பும்
பகரு முதிர்ச்சியும் பந்தமும் வீடு
மாமென மொழியி னனேகாந் தத்தி
னேழென வருமென் றியம்பின ரமணர். கசு

तदेव सत्तदेवासदिति केन प्रमीयते ॥ १७
सदन्यदसदन्यच्च तदेवं सिद्धसाध्यता ।

அதுவே யுளது மிலதுமென் றறியா
ருளது மிலதும் பிறிதுபிறி தாகலிற்
றெரியுங் காலத்துச் சித்தசாத் தியமே. ௧௭

असज्जघन्यं सच्छ्रेष्ठमित्यपि ब्रुवते बुधाः ॥ १८

नैकत्र तदपेक्षातः स्थितमेवोभयं ततः ।
अथ चेत्सदसद्भावः सदा युक्ततरो मतः ॥ १९

அசத்திழி வாகுஞ் சத்துயர் வாகு
மிருக்கு மொன்றிலென் றெண்ணுர் புலவ
ரெண்ணினு மொருவழி யியல்பென மொழியார். ௧௮

तत्कर्मसंकरभयादव्यापित्वं च ते जगुः ।
सामान्येतरसंबन्धज्ञानाभावादचेतसः ॥ २०

வினைகள் விரவு மெனவுயிர்க் குடலி
னளவு கொண்டனர் பொதுவுஞ் சிறப்புமென்
றுளநிலை கோடற் குணர்வி லோரே. ௧௯

यः प्रागव्यापकः सोऽन्ते कथमन्यादृशो भवेत् ।
स विकासादिधर्मा चेत्ततो दोषपरम्परा ॥ २१

காய மளவிற் காணுமவ் வியாபி
வேறு படுவ தெங்ஙன முத்தியிற்
குவிதலும் விரிதலுங் கூடு மென்னிற்
படுபுகர் நிரையிற் பழுதுறு முயிரே. ௨௰

நையாயிகற் சங்கற்பமும் – நிராகரணமும்.

षट्पदार्थपरिज्ञानान्मिथ्याज्ञानं निवर्तते ।
रागद्वेषौ ममत्वं च तद्विशेषगुणास्ततः ॥ २२

क्रमशो विनिवर्तन्ते देहसंयोगजा यतः ।
सा मुक्तिर्जडतारूपा ततो मुक्तः शवो न किम् ॥ २३

அறுவகைப் பொருளுந் தெருள மயர்வறும்
மயர்வற விருப்பும் வெறுப்பு மமதையும்
பிறவுங் காயத் துறுவன தவிர்ந்து
வருமுறை யானே வரும்வீ டென்பர்
பொருளியல் புணர்ந்த புலமை யோரே. ௨௧

உடலியை பொழியப் படுமறி வின்மையிற்
சடதா முத்தி சவமும் பெறுமே. ௨௨

பௌத்த சங்கற்பமும் – நிராகரணமும்.

चिद्व्यञ्जकस्य कर्मादेः क्षणिकत्वान्मुहुर्मुहुः ।
व्यज्यते जायमानैव क्षणिकेति मता परैः ॥ २४

அறிவெழ வரூஉங் கருமமும் பிறவு
மிறுதலிற் றோன்றிக் கணந்தொறு மிதுவு
மத்தகு மரபி னுமெனக் கருதிப்
புத்தர் கணிகம் புகன்றன ருயிர்க்கே. ௨௩

तदसत्कर्मणो भोगादतीतानुभवस्मृतेः ।
स्थितिर्निरन्वये नाशे न स्मृतेर्नापि कर्मणः ॥ २५

அதுமா சுடைத்து வினைநுகர் வானுங்
கழிபொழு தனுபவங் காணுத லானு
மிடைமுறி வின்றி யெய்தலி னசை
வினையொடு கரும நிலையரி தானும். ௨௪

विनाशलक्षणोऽपैति न मुक्तावप्युपप्लवः ।
नचास्त्यनुभवः कश्चिद्भवावस्था वरं ततः ॥ २६

வீடு பெறினும் விநாச மென்னும்
பீடை விடாது பெருமறி விற்கொன்
ருதலு மின்மையி னங்ஙன முத்தி
சார்தலிற் பிறவி சாலவு நன்றே. உரு

इत्याद्यज्ञानमूढानां मतमाश्रित्य दुर्धियः।
अपवर्गमभीप्सन्ति खद्योतात्पावकार्थिनः॥ २७

எனுமட வோர்பல ரிவர்வழி நின்று
வரும்வீ டென்பர் வாய்மை யுணரா
ரெரியின் மினிதரு மென்றுழல் வோரே. உசா

यत्कैवल्यं पुंस्प्रकृत्योर्विवेका
द्यो वा सर्वं ब्रह्म मत्वा विरामः।
या वा काश्चिन्मुक्तयः पाशजन्या
स्तास्ताःसर्वा भेदमायान्ति सृष्टौ॥ २८

பகுதியு முயிரும் பகுத்தறி வானு
முழுதும் பிரம மெனமொழி வானும்
பிறரும் வீடு பெறுவன வெல்லாம்
பாச நிலையிற் படுவன வாகலிற்
பேத மடையும் பின்பு படைப்புழி. உஎ

शैवे सिद्धे भाति मूर्ध्नीतरेषां
मुक्तः सृष्टौ पुनरभ्येति नाधः।
विश्वानर्थान्स्वेन विष्टभ्य धाम्ना
सर्वेशानानीशितः सर्वदास्ते॥ २९

இவர்முடி மிசையிற் சிவமதத் தியலுஞ்
சித்த னிருக்கு மூத்தன் படைப்புழி
வாரா னிழிந்து வயங்குதன் பண்பிற்
பாரா னின்று பலவுந் தலைவு
னேவா தென்று மிருந்து விளங்கும். உ௮

இரண்டாவது பரமோட்ச நிராச படல முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது பதிபடலம்

अथोपलभ्य देहादि वस्तु कार्यत्वधर्मकम् ।
कर्तारमस्य जानीमो विशिष्टमनुमानतः ॥ १

கண்டு தனுமுதற் காரிய தரும
முண்டுல கிற்குச் சிறந்த வினைமுத
லென்றனு மானத் தியம்புவர் புலவர். க

यद्यथा यादृशं यावत्कार्यं तत्कारणं तथा ।

செய்வோன் சிறப்புச் சிறப்புடை வினைமையி
னெவ்வா றியலுங் காரிய முலகமு
மவ்வா றறியுங் காரண மனைத்தும். உ

नित्यं कालानवच्छेदाद्व्याप्तत्वान्न प्रदेशगम् ॥ २
क्रमाक्रमसमुत्पत्तेः क्रमाद्युत्पत्तिशक्तिमत् ।

கால தேசங் கடத்தலி னித்தியன்
முனின்ற யெங்கு நிறைபவன் றன்செய
லொன்றன் றெனவு மொக்கவு நிகழ்தலி
னின்றவச் சத்தி நிலைமை யுடையன். ௩

तस्यास्ति करणं येन दृष्टा नाकरणा कृतिः ॥ ३

अनागामि च तज्ज्ञेयं कार्यस्यानादिसंस्थितेः ।

கரண முண்டு காரிய முலகிற்
கரண மின்றிக் காண்ட லின்மையிற்
கரண மனாதி காரிய மவ்வா
றெனவுண் டாதலி னிறையோ னுக்கே. ௪

करणं च न शक्त्यन्यच्छक्तिर्नाचेतना चितः ॥ ४

विषयानियमादेकं बोधे कृत्ये च तत्तथा ।

சத்தி கரணந் தலைவன தாகலிற்
சித்தமஃ தொன்றே செயலு மறிவும்
வைத்த பொருளின் வரைநிலை யின்றே. ௫

कार्यं न स्थितिजन्मादि वीजस्य प्रकृतेरणोः ॥ ५

पारिशेष्यान्महेशस्य मुक्तस्य शिव एव सः ।

காரிய மனைத்துங் கருமமும் பகுதியுஞ்
சீவனு மன்று செய்பவ னின்ற
முதல்வ னென்ப முத்தனுக் கன்று
சிவனவ னென்னுஞ் சிறப்பி னனே. ௬

संबन्धाग्रहणे बाधा मानस्याभ्येति कस्यचित् ॥ ६

सा परस्यापि धूमोऽन्यो गिरौ महानसाद्यतः ।

இறுத லின்றி யியைபு கோடல்
பிறழு மென்னிற் பிறர்க்கு முண்டே
யட்டி லெழுபுகை யனலைக் கண்ட
மட்டி லன்றி வரையிற் கோடலின். ௭

लोके वपुष्मतो दृष्टं कृत्यं सोऽप्यस्मदादिवत् ॥ ७
मूलाद्यसंभवाच्छाक्तं वपुर्नो तादृशं प्रभोः ।

காரிய முலகிற் காண்பது தேகிக்
காதலி னிவனு மனைய னென்னின்
மூலமும் பிறவு மின்மையிற் சத்தி
மேனி யென்று விளம்பின ரிறைக்கே. அ

तद्वपुः पञ्चभिर्मन्त्रैः पञ्चकृत्योपयोगिभिः ॥ ८
ईशतत्पुरुषाघोरवामाजैर्मस्तकादिकम् ।

அத்தகு வடிவீ சான மாதி
சத்தியோ சாத மீறென வைந்து
மைந்தொழில் செய்யு மந்திர மவற்கே. கூ

ईष्टे येन जगत्सर्वं गुणेनोपरिवर्तिना ॥ ९
स मूर्धसमदेशत्वान्मूर्धा नावयवस्तनोः ।

பாத்துயிர்க் கருளும் பண்பினீ சான
மூர்த்தா வென்று மொழிந்தன ரிறைக்கே. க௦

तस्य तस्य तनुर्या पूस्तस्यामुषति येन सः ॥ १०
तत्त्राणाद्यञ्जनाच्चापि स तत्पुरुषवक्त्रकः ।

தனுத்தொறும் புரியெனத் தானிருந் திறைவன்
விளக்கி யருளலின் மேவுதற் புருட
மவற்கு வத்திர மாகு மென்ப. கக

हृदयं बोधपर्यायः सोऽस्य घोरः शिवो यतः ॥ ११
परिग्रहस्य घोरत्वाद्धोरोक्तिरुपचारतः ।

இருதய ஞான மிதுசிவ மென்ன
வருதலி னகோர மாகு மிறைக்குக்
கோர மென்பது கொண்ட பொருணிலை
யாதலி னியல்பென் றுகுத லின்றே. கஉ

वामस्त्रिवर्गवामत्वाद्रहस्यश्च स्वभावतः॥ १२
वामं धाम परं गुह्यं यस्यासौ वामगुह्यकः।

வாமமுப் பொருளு பவர்பிகழ்த் துவது
சீலந் திகழ்வது தேவ னென்பது
மறையா குங்குய்ய மவற்கியன் றதுவே. கங

सद्योऽणूनां मूर्तयः संभवन्ति यस्येच्छातस्तेन सद्योऽभिधानः
सद्यो मूर्तीर्योगिनां वा विधत्ते सद्योमूर्तिः कृत्यशैघ्र्यान्न मूर्तेः॥

உயிருக் குடலும் யோகருக் கருளும்
வடிவுந் தொழிலு மவாவினார்ந் தருளுந்
தகுதியிற் சத்தியோ சாத மனைத்தும். கச

इत्थं शक्तिः कुर्वती देहकृत्यं
देहाभावादुच्यते देहशब्दैः।
तस्या भेदा येऽपि वामादयः स्यु
स्तेऽपि प्रोक्ताः कृत्यभेदेन सद्भिः॥ १४

இங்ஙனஞ் சத்தி யிறைக்குறுப் பின்மையிற்
செய்ததன் றொழிலைத் தேக மெனப்படும்
வாமை முதலா வருமர பினவும்
ஆமதன் பேத மங்கிலை யான. கரு

மூன்றாவது பதிபடல முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

நாலாவது சிருட்டியாதி படலம்

स इत्थंविग्रहोऽनेन करणेनाहतौजसा ।
करोति सर्वदा कृत्यं यदा यदुपपद्यते ॥ १

அந்நிலை வடிவி னண்ணல் சத்தி
யென்னுங் கரணத் தெல்லா மியற்றுங்
காலமு நிலையுங் கருதி நாளும். க

तत्रादौ केवलाणूनां योग्यानां कुरुतेऽष्टकम् ।
वामादिशक्तिभिर्युक्तं सप्तकोटिपरिच्छदम् ॥ २

தலைநா ளிறைவன் றகுதியிற் கேவல
ரிருநால் வரையு மேழு கோடி
மறைமையயு மருளினன் வாமா திகளொடும். உ

तेषामनन्तः सूक्ष्मश्च तथा चैव शिवोत्तमः ।
एकनेत्रैकरुद्रौ च त्रिमूर्तिश्चासितद्युतिः ॥ ३
श्रीकण्ठश्च शिखण्डी च राजराजेश्वरेश्वराः ।

அநந்தர் முதலாச் சிகண்டி யீருச்
சிறந்த வெண்மருஞ் சீர்சால் வேந்தரி
னுயர்ந்தவர் தம்பி னுயர்ந்தோர்க் கிறைவர். ௩

ईषदप्राप्तयोगत्वान्नियोज्याः परमेष्ठिनः ॥ ४
सर्वज्ञत्वादियोगेऽपि नियोज्यत्वं मलांशतः ।
परस्परं विशिष्यन्ते मन्त्राश्चैवमधःस्थिताः ॥ ५

ஒருசிறி துருத யோகமுண் டாகலி
னவரிறை வழிநின் றறிந்தியற் றுவர்முற்

றுணர்தலுஞ் செய்தியு முடைய ரேனு
மிருள்சிறி தெய்தலி னெய்துமற் றதுவே.
அவரிரு நால்வரு மடைவிற் சிறந்த
வியல்பின ரொக்கு மிங்கிலை பிறக்கும்.

ते च मन्त्रेश्वरव्यक्तशिवशक्तिप्रचोदिताः ।
कुर्वन्त्यनुग्रहं पुंसां यदा येषां स युज्यते ॥

மந்திர மனைத்து மந்திர வேந்தர்
சிந்தை விளங்கு சிவனியல் பென்னுஞ்
சத்தி வழியிற் றருமுயிர்க் கருளும்.

प्रयोक्तृदेहसापेक्षं तदर्धमखिलेऽध्वनि ।
कृत्वाधिकारं स्थित्यन्ते शिवं विशति सेश्वरम् ॥

இருபாற் படவரு மந்திரத் தொகுதியி
னொருபா லிறைவ னுடையதி கரண
மெனுமவர் வழிப்பட் டெவ்வுல கத்து
மருள்பவர்க் கருளி பதிபதி யொடுசென்
றிறுதியிற் சிவனை யெய்து மென்ப.

विनाधिकरणेनान्यत्प्रधानविकृतेरधः ।
कृत्वाधिकारमीशेष्टमपैति स्वाध्वसंहतौ ॥

அதிகர ணத்தா னன்றிப் பிரதான
விகுதிக் கீழன வேண்டு மிறைக்குக்
கரண மாகிக் காரிய முடிவி
னுயர்கதி யினமற் றொருபா லனவே.

ततोऽनन्ताद्यभिव्यक्तः पतीनां ग्रन्थितत्त्वतः ।
कलाद्यारब्धदेहानां करोत्यष्टादशं शतम् ॥

அவாந்த ருள்ளிட் டவர்வயி னின்ருேன்
கிரந்தி யென்று கிளக்கு மாயையி
னிலாவு நூற்றுப் பதினெண் மருக்குங்
கலாதி யுடலங் கற்பித் தருளும். ௯

तानध्याविश्य भगवान्साञ्जनान् भुवनाधिपान् ।
येभ्यः सर्वमिदं येषां शक्तिः कर्मनिबन्धना ॥ १०

இவர்வயி னின்ற விறைவன் மூன்று
மலமுட னின்ற மற்றையர்க் கருளுஞ்
சகல ரெனுமத் தலைவர்க ளாலிவ்
வுலக மனைத்து முண்டாம் பின்னர். ௧௦

प्रणेतॄन्पशुशास्त्राणां पशूंस्तदनुवर्तकान् ।
स्वसाध्यकारकोपेतान्कालधामावधिस्थितान् ॥ ११

பதநடை காட்டும் பண்பினர் கூறு
நிலையொ டுறுபய னேரு மாந்தரென்
ருகிய காலாக் கினிபத மளவா
மேவுநர் தமையவ் விமலன் படைக்கும். ௧௧

स्थितौ सकारकानेतान्समाक्रम्य स्वतेजसा ।
युनक्ति स्वार्थसिद्ध्यर्थं भूतैरनभिलक्षितः ॥ १२

நின்றுழிக் காரக மெல்லா நிலைமையிற்
சென்றிடத் தனது சத்தியிற் செலுத்துந்
தன்பய னடையுந் தகுதியி னுயிர்க
ளென்பன வுணரா வியல்பி னனே. ௧௨

भोगसाधनमाक्षिप्य कृत्वा कारणसंश्रयम् ।
तच्च सात्मकमाक्रम्य विश्रमायावतिष्ठते ॥ १३

भविनां भवखिन्नानां सर्वभूतहितो यतः ।

போக சாதன மியாவையுங் காரண
மாகியெவ் வுயிரு மடங்கு மாயையி
னெடுக்கிப் பிறப்பி னுழன்ற வுயிரி
னிளைப்பு மாற்று மிறையருள் சுரந்தே. கரு

स्वापावसानमासाद्य पुनः प्राग्वत्प्रवर्तते ॥ १४

நடத்தும் பின்னரு நாதனம் முடிவிற்
படைப்புமுத லனைத்தும் பண்டு போல. கசு

स्वापेऽप्यास्ते बोधयन्बोधयोग्यान्
रोध्यान्रुन्धन्पाचयन्कर्मिकर्म ।
मायाशक्तीर्व्यक्तियोग्याः प्रकुर्वन्
पश्यन्सर्वं यद्यथा वस्तुजातम् ॥ १५

உணர்வன வுணர வொழிந்த மற்றுயிர்
மறைவின வாக வல்வினை பழுக்கப்
பகுதி நிலைமை பாற்படப் பொருளி
னியல்பறிந் திறைவ னிரவினுஞ் செய்யும். கரு

நாலாவது சிருட்டியாதிபடல முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது அனுக்கிரகப் படலம்

तमःशक्त्यधिकारस्य निवृत्तेस्तत्परिच्युतौ ।
व्यनक्ति दृक्क्रियानन्त्यं जगद्बन्धुरणोः शिवः ॥ १

இறைவன் சத்தி யிருளது நிலைமை
யொழிய மற்றது கழிதலு முயிர்க்கு
விரியு மறிவுந் தொழிலும் விளக்கும். க

यान्विमोचयति स्वापे शिवाः सद्यो भवन्ति ते।
संहृतौ वा समुद्भूतावणवः पतयोऽथवा॥ २

கேவலத் தருளப் படுவன வியாவு
மேவுஞ் சிவமென விடுத்த வெல்லையிற்
றுடைப்பினுந் தோற்றினுஞ் சொல்லிய தன்றி
யணுக்க ளிறைவரு மாகு மென்ப. ௨

रुद्रमन्त्रपतीशानपदभाजो भवन्ति ते।
स्थितौ याननुगृह्णाति गुरुमास्थाय चिद्गतः॥ ३

திதியி னிறைவர் தேசிகர் வயினின்
றருளு மரபி னறிவுடை யுயிர்கள்
உருத்திரர் மந்திர ருயர்பதி வேந்தர்
பதத்து நிலையும் பண்புடை யனவே. ௩

येषां शरीरिणां शक्तिः पतत्यविनिवृत्तये।
तेषां तल्लिङ्गमौत्सुक्यं मुक्तौ द्वेषो भवस्थितौ॥ ४

भक्तिश्च शिवभक्तेषु श्रद्धा तच्छासके विधौ।
अनेनानुमितिः शिष्टहेतोः स्थूलधियामपि॥ ५

உயிரின் பிறவி யொழிதற் பொருட்டு
நிகழுங் காலைச் சத்திநி பாத
மொன்றிடை விருப்பு முலகியல் வெறுப்பு
மன்பு மரனடி யார்வயிற் சைவ
மென்பத னிலைகொண் டெழுதலுங் குறியே. ௪

இதனி னியார்க்கு மெஞ்சிய பாச
நிலையி னனுமிதி நிகழு மென்ப. ௫

पशुदृग्योगसिद्धानां कर्मव्यक्तिद्वयं समम् ।
ज्येष्ठादिफलयोग्यानां साधिकारासु मुक्तिषु ॥ ६

उपायादरवैशिष्ट्यान्मृग्यते तत्त्रयं पुनः ।
द्वयोर्व्यक्तिकरः कश्चिच्च्युतिसिद्धिविलक्षितः ॥ ७

கரும விளைவி னிருமையிற் சமதை
பசுநிலை கொண்டு பயின்றோர்க் கீண்டு
முதலிடை கடையெனு மூவகைப் பயனு
மடையு முயிர்க்கதி கார முத்தி
நெறியா தரவென நின்ற சிறப்பி
னதுமூ வகையென் றுதல் வேண்டும். ௬

அவற்றுள்,
இடைகடை யெனும்பய னீக்கமுஞ் சித்தியு
முடைமையி னிடையூ றுண்டிரண் டிற்கும். ௭

ईषदर्थनिवृत्ते तु रोधकत्वे तमःपतेः ।
भवन्त्येतानि लिङ्गानि किंचिच्छिष्टे च देहिनाम् ॥ ८

மறையிரு ளிறைவன் மாற்றி னுயிர்க்குச்
சிறிதும் பாதியுஞ் சிறிதுவிட் டனைத்து
மொழிதலி னினக்குறி யொருமூ வகைத்தே. ௮

योग्यतात्रयमप्येतत्समतीत्य महेश्वरः ।
स्वापेऽणुमनुगृह्णाति साधिकारमिदं यतः ॥ ९

இறைவ னுயிர்க்குக் கேவலத் தருளிற்
றகுதி வேண்டான் றகுதி மூன்றும்
பதமடை வோர்க்குப் பகர்ந்தன வாதலின். ௯

सर्गमूले तृतीयायां स्वापवद्भूतसंहृतौ।
स यद्यपास्य क्रियते तद्विधो योऽणुरुच्यते॥ १०

படைப்பி னுதியில் மூன்று முறையிற்
றுடைப்பினுங் கேவலக் கிடைப்படு மரபி
னணுவிற் கருளு மமல னணுத்தா
னெனநின் றதைவிட் டிவனிற் சிவனென
வருதலி னப்பெயர் மன்னு முயிர்க்கே. க0

तथा बीजं शरीरादेः पाचयत्याऽऽनिवेशनात्।
न योग्यताङ्गमभजत्सद्यः स्यादौषधादिवत्॥ ११

இறைவ னெங்கு மிலங்குதன் னியல்பி
னுடன்முத லனைத்து முண்டாங் கரும
விளைவு மியற்றும் வினையுடன் பாக
மாகிப் பலியா தாதலின் மருந்தென. கக

पाकार्हमपि तत्पक्तुं नेशत्यात्मानमात्मना।
धर्मसामान्य एवायं सर्वस्य परिणामिनः॥ १२

பாக மாகும் பரிசின தொன்று
தானே தன்னி னுகா திதுவே
பொதுவியல் பரிணா மிக்கும் பொருட்கெலாம். கஉ

सर्वज्ञः सर्वकर्तृत्वात्साधनाङ्गफलैः सह।
यो यज्जानाति कुरुते स तदेवेति सुस्थितम्॥ १३

இறைமுழு துணரு மெல்லாஞ் செய்தலிற்
கருவி யங்கம் பயனொடு கூட
வறிபவ னன்றே யாற்றுவ னென்றை. கங

तच्चास्यावृतिशून्यत्वान्न व्यञ्जकमपेक्षते ।
तन्न सांशयिकं तस्माद्विपरीतं न जातुचित् ॥ १४

காணுமிவ் வறிவு காட்டுவ தின்றி
மூல மின்மையின் முதல்வனுக் கங்ஙு
னையந் திரிவுக ளாதலு மின்றே. கச

यानि व्यञ्जकमीक्षन्ते वृतत्वान्मलशक्तिभिः ।
व्यञ्जकस्यानुरोधेन तानि स्युर्व्याहतान्यपि ॥ १५

ஆணவ சத்தி மறைப்பி னறிவுகள்
காணு மொன்றுகொண் டாதலி னதனியல்
பானுறும் பழுது மறிவுடை யனவே. கரு

नाध्यक्षं नापि तल्लैङ्गं न शाब्दमपि शाङ्करम् ।
ज्ञानमाभाति विमलं सर्वदा सर्ववस्तुषु ॥ १६

காட்சி கருதல் பனுவ லிவற்றின்
பாற்பட வரூஉம் பண்பி னன்றி
நின்று தலைவ னிருமல ஞான
மென்று மியலு மெல்லா வற்றினும். கசா

तदेकं विषयानन्त्याद्भेदानन्त्यं प्रपद्यते ।
कर्तृत्वं तदभिन्नत्वात्तद्वदेवोपचारतः ॥ १७

இறைவ னறிவொன் றெனினும் பொருள்க
ளளவில வாலஃ தளவின் றியலும்
பேத மின்மையிற் செய்தியு மனைத்தென்
றோதத் தகுமுப சார வழக்கின். கஎ

सत्तास्वरूपकरणार्थविधेयदृग्भि-
लैंशोदिताभिरिति ये विदुरीशतत्त्वम् ।
ते मोचयन्ति भविनो भवपङ्कमग्नान्
नो विस्तरेण पुरुषः पशुपाशरूपम् ॥ १८

உளநிலை தன்மை கரணம் பயனொடு
தொழிலென வைந்துஞ் சுருங்கச் சொல்லு
மிவ்விய லாநின் றிறைநிலை யுணர்வோர்
செவ்விதி னொன்று சேர்வ ரன்றிப்
பசுவும் பாசமு மெனவிரித் துணர்வோர்
பிறவியி னுழலும் பெற்றி யோரே.

ஐந்தாவது அனுக்கிரகப்படல முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

ஆறுவது பசுபடலம்

अथ विश्वनिमित्तस्य प्राप्तं लक्षणमात्मनः ।
तदीशोक्तौ गतप्रायं तथाप्युद्देश उच्यते ॥ १

உலக நிமித்தத் துயிர்நிலை யுணர்த்திற்
சிறிது நெறியிற் செப்புவன் முன்ன
ரிறைவ னிலைமை யியம்பிய வழியவ்
வுயிரி னியல்பு முணரக் கூறலின்.

कार्यं क्षित्यादि कर्तेशस्तत्कर्तुर्नोपयुज्यते ।
न स्वार्थमप्यचिद्भावान्नानर्थ्यं कर्तृगौरवात् ॥ २
पारिशेष्यात्परार्थं तत् क्षेत्रज्ञः स परस्तयोः ।

நிலமுதல் காரிய நிருமலன் செய்வோ
னியைவதொன் றின்மையி னிவற்கு வேண்டா
சடமென லாலவை தம்பொருட் டன்று
பயனில தன்று பலரு மியற்றலிற்
பிறிதொன் றொழிவிற் பெறுவதுண் டாகலி
னஃதிவ் விரண்டி னன்றெனப் படுமே. ௨

परो देहस्तदर्थत्वात्परार्थाः क्ष्मादयो ननु ॥ ३
कायोऽप्यचित्त्वादन्यार्थं सुतरां प्रतिपद्यते ।

நிலமுத லனைத்து நிகழ்தலி னுடற்குப்
பயனென வுடலே பரமா மென்னின்
அறிவில துடல மாதலி னதுவும்
பிறிதோ ரறிவு பெறுபய னென்ன
வருதலி னுடற்கு வாரா தன்றே. ௩

चेतनश्चेन्न भोग्यत्वाद्विकारित्वाच्च जातुचित् ॥ ४
भोग्या विकारिणो दृष्टाश्चिद्विहीनाः पटादयः ।

அறிவுட லென்னி னன்றிது சடமே
நுகரு மியல்பி னன்றி விகாரப்
படுதலுங் காணலிற் படமுத லன்பால். ௪

यस्मिन्सति च सत्त्वाद्वा न सत्यपि शवे चितिः ॥ ५
அன்வய வெதிரே கத்தி னறிவுட
லென்னிற் சவத்தி னியையா தன்றே. ௫

परिणामस्य वैशिष्ट्यादस्ति चेन्न स्मृतिस्तदा ।
नाप्येवं सुप्रतीतत्वात्स्मर्ता कायेतरोऽस्त्यतः ॥ ६

உயிர்ப்பி னறிவென வுடல்பரி ணாமச்
சிறப்பி னிகழு மென்னி னங்ஙனம்
நினைவுண் டாக நிகழா தன்றி
யஃதின் றெனலு மாகாது விளங்கு
மரபு சிறக்க வருதலி னதனு
ளுடலி னினைக்கு முயிர்வே றென்ப. ௬

नाव्यापको न क्षणिको नैको नापि जडात्मकः ।
नाकर्ता भिन्नचिद्योगी पाशान्ते शिवताश्रुतेः ॥ ७

ஒருவழி யுறைத லொன்றெனப் படுதல்
சடமென நிகழ்தல் சாதல் கணந்தொறும்
வினைமுத லின்றென வேண்டல் பிறிதோ
ரறிவொடு கூட லன்றி யுளதுயிர்
செறிவுழி வீடு சிவமெனக் கேட்டலின். ௭

ஆறுவது பசுபடல முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

ஞானபாதம் முற்றியது.